<u>மகிளா நீதிமன்றம், கடலூர்</u>

அமர்வு வழக்கு எண் **: 9/2021**

அரசுதரப்பு **3** -வது சாட்சியின் வாக்குமூலம்**.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரஞ்சனி | வயது | 24 |
| தந்தை பெயர் | பரமசிவம் | தொழில் | தனியார் நிறுவனம் |
| கிராமம் | சிலம்பிமங்கலம் | சமயம் | 3.42 P.M. |
| தாலூக்கா | புவனகிரி | தேதி | 22.08.2024 |
| மாவட்டம் | கடலூர் | | |

சட்டம் **44/1969-**ன் விதிமுறைகளின்படி சாட்சிக்கு **22.08.2024 -**ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது**. (** எதிரி ஆஜர் **)**

<u>பிரதம விசாரணை</u> **-** நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 1 ஆம் எதிரி என் அக்கா கணவர். 2 ஆவது எதிரி என் அக்கா மாமியார். அ.சா.1 என் தந்தை. நந்தினி என்பவர் என் உடன் பிறந்த சகோதரி. 05.02.2020 அன்று என் அக்காவிற்கு திருமணம் செய்து வைத்தார்கள். அவர்கள் காதலித்து பெரியவர்களால் நிச்சயம் செய்து திருமணம் நடைபெற்றது. முதலில் திருமணத்திற்கு எதுவும் வேண்டாம் என்று சொன்னார்கள் அதன்பிறகு நகை, பணம் வேண்டும் என்று என்னுடைய அக்காவின் மாமியார் கேட்டார். 10 சவரன் நகை கேட்டார்கள் இரண்டரை சவரன் நகை என் அக்காவிற்கு போட்டார்கள். திருமணமாகி சென்னையில் வசித்து வந்தார்கள். ஒருநாள் என் அக்கா இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு என் அக்காவும் மாமாவும் எங்கள் வீட்டில் வந்து தங்கினார்கள். பிறகு அவர்கள் சென்றுவிட்டார்கள். ஒரு வாரத்தில் என் அக்கா இறந்துவிட்டதாக ரமேஷ் என்வர் தகவல் கூறினார். ஜன்னலில் ஷாலால் தூக்குமாட்டிக்கொண்டு இறந்துவிட்டதாக கூறினார்கள். என் அக்காவிற்கு எதிரிகள் நகை, பணம் கேட்டதால் அவர் மிகவும் மனஉலைச்சலில் இருந்து என்னிடம் இதை பற்றிக்கூறி போனில் வருத்தப்பட்டார். விரைவில் நகை செய்யவேண்டும் என்றும் தன்னுடைய மாமியாரும், கணவரும் கேட்டு கொடுமை செய்வதாக கூறினார். என் அம்மாவும் அப்பாவும் சென்று

பார்த்தபோது என் அக்கா ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறினார்கள். அதன்பிறகு போலீசாரும் சப்-கலெக்டரும் இது சம்மந்தமாக விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை - முதல் விசாரணையில் சொன்னதுபோல நகை, பணம் வரதட்சனை எதுவும் எதிரிகள் கேட்வில்லை என்றும் என் அப்பா சொல்லிக்கொடுத்து அதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அக்கா இறப்பதற்கு 2 நாட்களுக்கு முன்பு கூறி வருத்தப்பட்ட விவரத்தை போலீசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். RDO விசாரணையில் கடந்த ஒரு வாரமாக என் அக்கா என்னுடன் தொடர்வில் இல்லை என்று சொல்லியுள்ளேனா எனறால் சொல்லியுள்ளேன்.

மறுவிசாரணை இல்லை.